13

(8)

அரியலூர் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை -முனைவர்.அ.புகழேந்தி

ந.க.எண்.3234/அ1/2018 நாள். .10.2018

---

பொருள்: கருணை அடிப்படை நியமனம் - 2017-18ம் ஆண்டிற்கு ஒதுக்கீடு இளநிலை உதவியாளர்கள் பணியிடங்கள் - கருணை அடிப்படை நியமனம் மூலம் நிரப்புதல் - பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் - திருரா.இராதாகிருஷ்ணன், அலுவலகஉதவியாளர், அரசு உயநிலைப்பள்ளி எரவாங்குடி. அரியலூர் மாவட்டம் என்பாரின் வாரிசுதாரர் திரு.இரா.இரமேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் - இளநிலை உதவியாளர் பணி நியமனம் - ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை:
1. அரசாணை (3டி) எண்.12/ பள்ளிக் கல்வி 4(2)த் துறை நாள்.26.04.2018
2. அரசாணை எண்.101 பள்ளிக் கல்வி (வரவு செலவு) துறை, நாள்.18.05.2018
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர்தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.487/ஜே4/2018, நாள்.01.10.20108

---

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் இயக்குநரால் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படியும் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் அரியலூர் மாவட்டம், எரவாங்குடி, அரசு உயநிலைப்பள்ளியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து இறந்த அரசு ஊழியர் திரு.ரா.இராதாகிருஷ்ணன் என்பவரின் வாரிசுதாரர் திரு.இரா.ரமேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் முற்றிலும் தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பெயர் மற்றும் இல்ல முகவரி | நியமனம் அளிக்கப்படும் பள்ளி / அலுவலகம் |
|---|---|
| திரு.இரா.ரமேஷ்,<br>த/பெ.இராதாகிருஷ்ணன்,<br>எரவாங்குடி கிராமம்,<br>உடையார் பாளையம் வட்டம்,<br>அரியலூர் மாவட்டம் | அரசு மேல்நிலைப்பள்ளி,<br>அய்யப்பன்நாயக்கன்பேட்டை<br>அரியலூர் மாவட்டம் |

மேற்கண்ட நியமனம் முற்றிலும் தற்காலிகமானதாகும். நியமனம் பெற்றுள்ள நபர் இந்நியமன் ஆணை கிடைக்கப் பெற்ற ஒரு வாரத்திற்குள் பணியில் சேர வேண்டும். உரிய காலத்திற்குள் பணியில் சேரத் தவறினாலோ அல்லது விண்ணப்பதாரரால் தரப்பட்டுள்ள விவரங்கள் தவறு என அறிய வந்தாலோ இந்நியமனம் இரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும். பணியில் சேரும் நாளன்று உதவி மருத்துவ அலுவலரிடமிருந்து உடல் நலத் தகுதிச் சான்று பெற்று பணியில் சேர வேண்டும். பணியில் சேர்ந்த உடன் அதற்கான அறிக்கையினை உடனடியாக அன்றே இவ்வலுவலகத்திற்கு அனுப்ப கோரப்படுகிறது. பணியில் சேர்ந்த நாள் முதல் ஏழாவது ஊதியக் குழு பரிந்துரையின்படி அனுமதிக்கப்பட்ட ஊதியம் மற்றும் அதற்கு தகுதியுடைய இதர படிகளும் விதிகளின்படி பெற தகுதியுடையவர் ஆகிறார். இவரது கல்விச் சான்றுகளின் உண்மைத்தன்மை குறித்த சான்று உடனடியாக பெறப்பட வேண்டும்.

<u>நிபந்தனைகள்</u>

1. பள்ளி இறுதித் தேர்வில் தமிழை மொழிப்பாடமாகவோ அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாதவராகவோ இருப்பின் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத் தேர்வில் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
2. தனியரின் எஸ்.எஸ்.எல்.சி. சான்றின் உண்மைத்தன்மை அறிய எடுக்கப்படும் நடவடிக்கையில் தனியர் முன்னிலைப்படுத்திய கல்விச் சான்று உண்மையானது அல்லது என்றோ விதிகளின்படி மதிப்பீடு செய்ய இயலாது என்றோ கண்டறியப்பட்டால், தனியருக்கு வழங்கப்பட்ட நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி நீக்கறவு செய்யப்படும்.
3. தனியர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.
4. அரசுக் கடிதம் எண்.2941/க்யு1/1994-1, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்.01.03.1994-ன்படி ஓராண்டு காலத்திற்குள் பணிவான்முறை கருத்துரு தவறாமல் இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

1.10.18

முதன்மைக் கல்வி அலுவலர்,
அரியலூர்

தலைமையாசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
அய்யப்பநாயக்கன்பேட்டை,
அரியலூர் மாவட்டம்-612 903.

பெறுநர்

திரு.இரா.ரமேஷ்,
த/பெ.இராதாகிருஷ்ணன்,
எரவாங்குடி கிராமம்,
உடையார் பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம்

தலைமையாசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி,
அய்யப்பநாயக்கன்பேட்டை,
அரியலூர் மாவட்டம்-612 903.

நகல்-தலைமைஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, அய்யப்பன்நாயக்கன்பேட்டை
நகல்-தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர்தொகுதி), சென்னை-6
அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.